<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 24.03.2026

அசல் வழக்கு எண். 154/2009

பி.சா.1 – நீலமேகம், த/பெ. பெருமாள்சாமி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீங்கள் நான்கு மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகளின் தகப்பனார் என்றால் சரிதான். ராகவன் பிள்ளை என்பவருக்கு இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் என்றால் சரிதான். அதாவது அவர்களுக்கு வாசுதேவன், ராஜகோபால், செல்லம்மாள், முனியம்மாள் ஆகிய நான்கு பிள்ளைகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று சொன்னால் சரியில்லை. வழக்கு சொத்து பென்னலூர் கிராமத்தில் இருக்கிறது என்றால் சரிதான். நீங்கள் வழக்கு சொத்தினை கடந்த 22.12.2006 அன்று ராஜகோபால் என்பவரிடம் மட்டுமே கிரயம் வாங்கினீர்கள் என்றால் வாங்கினேன் ஒரு பகுதியாக 52 செண்டு வாங்கினேன். விற்பனை ஆவணத்தில் ராஜகோபால் அவர்களின் கையொப்பம் இருக்கிறதா என்றால் இல்லை பொது அதிகாரம் கொடுத்துள்ளார் அதன் அடிப்படையில் வாங்கினேன். ராஜகோபால் யாருக்கு பொது அதிகாரம் கொடுத்தார் என்றால் விஜயலட்சுமி என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்தார். வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 133/1, 132/3 ஆகும். ராகவ பிள்ளை என்பவருக்கு நான்கு பிள்ளைகள் இருப்பதாக சொல்கிறீர்கள் அப்படி இருக்கும் பட்சத்தில் ஏன் ஒரு பிள்ளையிடம் இருந்து வாங்கினீர்கள் என்றால் உயில் ஆவணத்தில் ராஜகோபால் என்பவருக்கு மட்டுமே சொத்துக் கொடுக்கப்பட்டது. உயில் எந்த ஆண்டு எழுதப்பட்டது

தெரியுமா என்றால் கடந்த 24.05.2003 அன்று எழுதப்பட்டது. உயில் ஆவணத்தின் அசல் ஆவணத்தை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். நீங்கள் வாங்கிய வழக்கு சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் இருந்தது என்றால் ராகவ பிள்ளை என்பவரது பெயரில் இருந்தது. வாசுதேவன் என்பவருக்கு ராகவ பிள்ளை இறப்பதற்கு முன்பே ஒரு சில சொத்துக்களை கொடுத்து விட்டதாக உங்களுடைய பிரமாணம் வாக்குமூலத்தில் சொல்லி உள்ளீர்கள் அவ்வாறு ஆவணங்கள் ஏதேனும் நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. ராகவபிள்ளை எந்த உயில் ஆவணமும் எழுதி வைக்கவில்லை நீங்கள் வழக்குக்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. ராஜகோபால் என்பவரிடம் மட்டும் நீங்கள் சொத்து வாங்கியது தவறு என்று சொன்னால் சரி இல்லை வழக்கு சொத்தானது கூட்டு குடும்ப சொத்து ஆனால் நீங்கள் பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram